# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date : 09.09.2025**

**OS No. : 406/2023**

**Pw : 2**

**Name : திரு. திருமலைக்குமார்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. இவ்வழக்கின் வாதி கஜேந்திரன் கேட்டுக்கொண்டதன் பேரில்தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கின் விவரங்கள் அனைத்தும் கஜேந்திரன் மற்றும் அவரது சகோதரர் ஆறுமுகம் ஆகியோர் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி கஜேந்திரன் வெங்காய வியாபாரம் செய்வதற்குரிய உரிமம் மற்றும் ஜி.எஸ்.டி கணக்கு எண் பெற்றுள்ளாரா என்ற விவரம் எனக்கு தெரியும், அவர் உரிமம் மற்றும் ஜி.எஸ்.டி பதிவெண் பெற்றுள்ளார். அந்த வியாபாரம் யார் பெயரில் செய்துவருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. உண்மையிலேயே வாதி வெங்காய வியாபாரம் செய்துவந்தார் என்றால் அதுபற்றிய முழு விவரமும் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல, எனக்கு நியாபகமில்லை, ஆனால் அந்த கடையை இன்று வரை மார்க்கெட்டில் நடத்திவருகிறார்.

2) வாதியின் சகோதரர் ஆறுமுகம் கோயமுத்தூரில் எங்கு வேலைசெய்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவர் கோயமுத்தூரில் வேலை பார்த்துக்கொண்டே வியாபாரம் செய்கிறார் என்று அவர்கள் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான், எனக்கு நேரடியாக தெரியாது. இந்த வழக்கின் பிரதிவாதி சரண்யாவை நான் இன்று தான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றால் சரியல்ல, பணம் கொடுத்தபோது நான் பார்த்துள்ளேன். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில்

உள்ள சங்கதிகள் கஜேந்திரன் சொல்லித்தான் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் அங்கு நடந்த விவரங்களை நான் சொல்லி தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிரூபண வாக்குமூலம் வாதி சொல்லியதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3) இந்த வழக்கின் பிரதிவாதி சரண்யாவின் கணவரின் பொருளாதார நிலை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி சரண்யாவின் பொருளாதார நிலை பற்றியும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். செப்டம்பர் 2020 ல் கொரோனா பொது முடக்கம் இருந்தது என்றால் வாகனப்போக்குவரத்து இருந்துவந்தது. 2020 செப்டம்பர் மாத இறுதியில்தான் மாவட்டங்களுக்கிடையேயான போக்குவரத்து தடை விலக்கிக்கொள்ளப்பட்டது என்றும், அதுவரை கொரோனா பொதுமுடக்கம் இருந்தது என்றும் சொன்னால் சரியல்ல.

4) பிராமிசரி நோட் என்றால் என்ன, கடன் பத்திரம் என்றால் என்ன என்ற விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிராமிசரி நோட்டில் கடன் பத்திர விவரங்கள் எழுதி அதில் வருவாய்த்துறை ஸ்டாம்பு ஒட்டி அதன் மீது கையெழுத்திடப்படும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பிராமிசரி நோட்டில் வருவாய்த்துறை வில்லை ஒட்டப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பிராமிசரி நோட்டை நான் பார்த்துள்ளேன். மேற்படி ஸ்டாம்ப் பேப்பர் வாங்கப்பட்ட தேதி எனக்கு தெரியும், 28.09.2020 ம் தேதி வாங்கப்பட்டது. அந்த முத்திரைத்தாள் 22.07.2020 ஆம் தேதி வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பிராமிசரி நோட்டில், சாட்சிகள் என்று டைப் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, சாட்சிகள் என்று டைப் செய்யப்பட்டிருந்தது. அந்த பிராமிசரி நோட்டில் ஆவணம் தயாரித்தவர் இன்னார் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு நியாபகமில்லை. ஏற்கெனவே கையொப்பமிடப்பட்ட ஆவணத்தில் வா.சா.ஆ.1 தயாரிக்கப்பட்ட காரணத்தினால்தான், சாட்சிகள் என்று டைப் செய்ய இடம் இன்றி அது தட்டச்சு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. ஏற்கெனவே தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் பின்னிட்டு சாட்சிகளின் பெயர் விவரங்கள் நெருக்கி எழுதப்பட்டுள்ளன என்று சொன்னால் சரியல்ல.

5) உடுமலைப்பேட்டை எங்கு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். அது திருப்பூர் மாவட்டத்தில் உள்ளது. பொதுவாக கடன் வாங்குபவர்தான் கடன் கொடுப்பவர் வீட்டிற்கு சென்று கடன் பெறுவார் என்றால் அது சந்தர்ப்ப சூழ்நிலையை பொருத்தது. கடன்

கொடுப்பவர் யாரும், கடன் வாங்குபவர் வீட்டிற்கு சென்று காத்திருந்து கடன்கொடுத்து வரமாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதியுடன் சேர்ந்து உடுமலைப்பேட்டை சென்றேன் என்றும், அங்கு என் முன்னிலையில் பிரதிவாதி கையொப்பமிட்டு பணம் பெற்றார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு வாதியிடம் கடன்பெறவேண்டிய பொருளாதார நெருக்கடி எதுவும் கிடையாது என்றால் சரியல்ல.

6) வாதியின் சகோதரர் ஆறுமுகம் என்பவர் எனது நண்பர் என்றால் சரிதான். ஆறுமுகம் பிரதிவாதியின் மீது பணம் மோசடி புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி கையொப்பமிட்ட ஆவணங்களை வித்யா என்பவரிடமிருந்து பெற்று அதனை தனது சகோதரரான வாதியிடம் கொடுத்து மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் முன்னிலையில் பிரதிவாதி எந்த கையொப்பமும் போடவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எனது நண்பருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi